பிசுமில்லாஹி:

இஃது,

நபியுல்லாபேரில்

முன்னோர்கள்பாடியதாலாட்டு,

இதனை குலசேகரம்பட்டணம்

சர்க்கரைசாகிபுத் தம்பி யவர்கள் குமாரர்

அல்லாபிச்சைப்

புலவரவர்களால் 1161

பிழையறப்பரிசோதித்து

பிரதிக்கிணங்கச்

சிந்தாதிரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியா

ரவர்களாற்

றமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

—*—

௲அ௭௨௵-பெப்பிரல்மீ,

THANJAVUR MAHARAJA SERFOJI'S

பிசுமில்லாகிற்றகுமானிற்றகிம்.

நபியுல்லாபேரில்

தாலாட்டு,

காப்பு. - வெண்பா.

பாருலகில்வண்ணப்-பரிமளப்வீசுமிரசூல் ... *
திருலகிற்றாலாட்டைச்-செப்புதற்குநேருடனே *
பார்த்தாலுமென்சொற்-பழுதுவராதபடி ... *
காத்தருள்வாயாதி-காப்பு ... ...*

கண்ணிகள்.

சீர்கொண்ட ஆலமெல்லாஞ் சிறந்தஇசுலாந்தழைக்க
நேர்கொண்டதீனை-நெறிகொண்டுவந்தவரே (க)

முன்னேயொளிவாகி - முதலோன்றிருத்தூதாய்ப்
பின்னேநபியாய்ப்-பிறந்தமுகம்மதுவே (உ)

அன்னலப்துல்லாதரும்-அருமைமகவாகப்-பெண்
ணழகாமினார்- பெற்றெடுத்தபாலகரோ (ங)

அலிமாமுலையருந்தி-பவாகத்திலேவளர்ந்து புலிமா
லெருதுலாநீர்-உண்ணவந்தபுண்ணியரோ (ச)

திக்குத்திகாந்தமொடுத்-தேயன்தனக்குயர்ந்த-மக்க
ப்பிறந்து-மதினமளந்தவரோ (ரு)

மட்டிலவுஞ் சொர்க்க-வாழ்மடவார் தாலாட்டத் தொ
ட்டிலிற் றுயில்கொண் ருர்-ஐயமுகம்மதுவே (௬)

மாணிக்கத் தொட்டிலில்-மடவார்பிடித்தாட்டப் புவி
க்கையாய்க் கண்வளரும் புண்ணியராய் வந்தவரோ (௭)

பார்க்கக்கண் ணொளியும்-பாலைகடுஞ் சுரத்தில்- இருக்கு
ம்நீரளிக்கும்-அண்ணல் முகம்மதரோ (௮)

பாம்மலைபோல் நாகம்-பதியிற்படம் விரித்தே றேறிவ
லாதிருக்கத்-துரும்பால் வதைக்கவந்தவரே (௯)

கானகத்திலா றதிலைக் - கடுகவரவழைத்தே- யீண்டி
நீரளிக்கவந்த-பெய்கண் முகம்மதுவே (௰)

புதியகிணறப்புநீர்- பொங்கிறமபதங்கழுவ- நபி
மைத்துக்காட்டவந்த-தன்மை முகம்மதுவே (௰௧)

எங்கணியிறைசா-பெல்லவர்க்குந் தாயகமே - அங்கா
கஸ்தூரிவீசு-மழகார் முகம்மதுவே (௰௨)

ஆதிபடைத்த - அப்துகளடங்களுக்கும்- நீதிமன்
பேரொளிவாய்-நின்ற முகம்மதுவே (௰௩)

முத்திதுதித்தவரோ-முமீனாய் வந்தவரே நித்தவருள்
வேதப்படிநெறிநடத்துங்கோமானே (௰௪)

மஞ்சுகுடைநிழற்றமக்காவின் வீதியெல்லாங்கொஞ்
சி-விளையாடுமெங்கள்-கோமான்முகம்மதுவே (௰௫)

விண்ணவர்நேசது-வேதமுகம்மதுவே,கண்ணின்ம
ணியேயெங்கள்- காரணரேகண்வளரீர் (௰௬)

தேசப்பொருளேநெவிட்டாச்செழும்பாகே வாசத்
திருமேனி-வள்ளன்முகம்மதுவே (௰௭)

உற்றஅபுபக்கர்க்கும்-உண்மையுமர்தமக்கும்- மற்று
நீக்கல்லாத மருகரெனவந்தவரே (௰௮)

செய்யவுதுமானார்க்குஞ்-சிறந்தபுலிஅலிக்கும் வை
யம்புகழுமாதுலராய்-வந்தமுகம்மதுவே (௰௯)

சீரிமாம்அசனார்-சிறந்தஇமாமுசைனார் - பேரார்
நம்பேரரெனப்- பேறுகொள்ளவந்தவரே (௨௰)

நன்னசுகாபிமார்கள்-நாற்பத்தீராயிரர்க்கும்- கண்
ணினொளிபோலக்-கலந்திருந்தகாரணரே (௨௧)

திக்குகளில்நிவிசுலாஞ்- சேர்ந்தவும்மத்தோர்களைத்
தற்காத்தேயாளும்-ஷபாஅத்துக்குடையவரே ()

பக்கமப்பொற்றுள்பீவி - பாத்திமாநாச்சியெனும்
மக்கையர்க்குத்தந்தையென- வந்தமுகம்மதுவே ()

அண்டர்புகழ்கதிஜா -அக்கணைவொன் றலகோர்-கொ
ண்டுபுகழவந்த-கோமான்முகம்மதுவே (௨௪)

எண்டிசையும்பாரு- மேகாப்பெரும்பதியும்- அண்
டருலகெல்லாம்-அரசாளவந்தவரே (௨௫)

சூட்டுறாத்தீபதனுட்-சுழன்றெரியும்பாவிகளை-ஈட்டே
ற்றிக்காக்கவந்த-வெங்கண்முகம்மதுவே (௨௬)

பீறேறும்பேசி-மிடியருக்குவாழ்வுதல்கி- மாறேறு
ம்பேசுமெங்கள்-வள்ளன்முகம்மதுவே (௨௭)

வேம்பானகாபிருக்கும்-வெட்டவரும்வழியிற்-பாம்
படையும்பொதும்பிற்-பள்ளிகொள்ளவந்தவரே ()

நல்லநெறியீமானு-நானிலத்திலேநழைக்கக்- கல்லு
ம்கரம்பிடித்துவிடக்-காட்டவந்தகாரணரே (௨௯)

திமைதனைப்பேசுகின்ற - செயலைக்கருவறுத்தே உண்
மைதனைப்பேசவைக்கும்- உத்தமுகம்மதுவே (௩௰)

அறபுத்திருநாட்டிக்-அடங்கலுப்பிடமான்றமைக்க கு
றைசிப்பெருங்குலத்தின் கோமானாய்வந்தவரே ()

சொல்லாலுயர்ந்ததிரு- சொர்க்கபதிக்கரசாய்- வல்
லாவருட்படிதீன் யாரம்மக்கும்வல்லவரோ (௩௨)

குமாரன்றனழைக்க-இசுலாம்பெருத்தோங்க- மாமானாங்
காக்கவந்த-மன்னர்முகம்மதுவே (௧௩)

நாயுமுடும்புமுசல்- நவிலுநாற்கால்மிருகம்-பேயநு
ந்தமோடெதிராய்ப்-பேசவைக்குங்காரணரே (௧௪)

கல்லுவணக்கும்- காபிர்களை இயறுத்து நல்லநெறியி
மானா-நாடேற்றவந்தவரே (௧௫)

விரித்தகுபிர்க்காட்டை-வெட்டிவழியாக்கிப்- பரித்த
புகழீமானைப் பயிரேற்றவந்தவரோ (௧௬)

செய்தவமெல்லாம்போற்றத் தீன்பயிராத்தானேற்
றி-கைவிரலாலிரவழைக்கும்-கபீபுமுகம்மதுவே ()

கொந்தாலமேபரசே-கோஜாலமானவரே- சந்தாப
மில்லாத-சாதிக்குலநாயகமே (௧௮)

குங்குமப்பூமாலையணி-சொற்றவர்களுக்கரசே- அங்
கத்தொளிவீச-மன்னவன்முகம்மதுவே (௧௯)

ஆராருங்காணவொண்ணாதந்தரத்தின்மேலேபோய்,
பேராரர்பெரியவன்முன் பேசவேவந்தவரே (௨௰)

வேதமேநாவில்-விளைவானவித்தகரே-பாதமங்களிதி
ண்டாய்-பயகாய்பர்கண்வவரீர் (௨௧)

பிடரிலணியாகப்-பிறைபோலிலாஞ்சனையும்-ப
பேறிவென்றவரும் பார்த்திபரேகண்வளரீர் (த

ஏகன்சமுகமதி- லெக்கிலெனுமரத்தில்-தோகை
ல்வடிவாய்த்- தோன்றிவந்தநன்னபியே (த

முன்காணுந்தூரமட்டு-முழுதுமதுபோலப் பி
ணுங்வள்ளலே-பெருமையாய்க்கண்வளரீர் (த

வள்ளல்முகம்மதுமேல்- வாழ்த்துகின்றதாலாட்
ப்பிள்ளையிப்பிரியம்போற்படிப்போர்களும்வா

மூமீன்முகம்மதநம்முத்தின்மொழிதாலாட்டை
மூமீநிலெந்நாளும்போற்றிவோர்வாழிவாழி (த

பூமியின்மும்மாரி - மழிபொழிந்தெவர்களும் வ
ஆமீனல்லா ஆமீன்-யாறப்பில் ஆலமீனே (த

நபியுல்லாபேரில்தாலாட்டு

முற்றிற்று.